**செ.வெ. எண்: 028** **நாள்: 12.01.2017**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>பொருட்கள் சேவை மற்றும் வரி</u>

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு 2013–2014 ஆம் ஆண்டில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) அறிவித்தது. இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 2606 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் பிரதமர் சுய வேலை வாய்ப்புத் திட்டம் (PMEGP) மற்றும் நகர்புற வேலையில்லா இளைஞர் சுய வேலை வாய்ப்புத் உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகியவற்றின் வாயிலாகவும் பல்லாயிரம் தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் 2013ல் அறிவித்துள்ள NEEDS திட்டம் மூலம், முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

<u>தற்போது தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தொழில் முனைவோர்களுக்கு</u> **<u>“பொருட்கள் சேவை மற்றும் வரி”</u>** குறித்து மேலும் தெரிந்துக்கொள்ளும் வகையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் வரும் 20.01.2017 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 02.00 மணி வரை அறை நாள் பயிற்சி நடத்த உள்ளதால் தொழில் செய்து வரும் தொழில்முனைவோர், திரு.வி.க தொழிற்பேட்டை T.I கட்டிடம், கிண்டி தபால் நிலையம் அருகிலும் கிண்டி இரயில் நிலையம் எதிரிலும் அமைந்துள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் கூட்டறங்கிற்கு வருகைதந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் தகவலுக்கு துணை இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மின்னஞ்சல்: <u>ddp@editn.in</u> தொலைபேசி எண்: 22252081 / 22252082, தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**